கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.180/2021 வா.சா.1 மகாலிங்கம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் உறுத்துக் கட்டளை கோரி மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிர்வழக்குரையில் பிரதிவாதி 3 இடங்களில் எனக்கும் வழக்கு சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு தவறாக குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதி எனக்கு வழக்கு சொத்துடன் சம்மந்தம் இல்லை என கட்சி செய்த போதும் நான் விளம்புகை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தவில்லை என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்து பரப்பளவு 98 சென்ட் மட்டுமே என்றால் சரிதான். வழக்கு சொத்து மதிப்பு என்ன என்றால் 1 ஏக்கர் 5 லட்சம் வரும். வழக்கு சொத்து மதிப்பு 1 ஏக்கர் 16.5 லட்சம் வரும் என்பதால் தான் நான் வழக்குரையை திருத்தவில்லை என்றால் சரியல்ல.

3) வழக்குரையில் வழக்கு சொத்து ஆதியில் என் பாட்டனார் கைலாசப்ப கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததாக கூறும் நிலையில் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா , சிட்டா தாக்கல் செய்துள்ளேன். கைலாசப்ப கவுண்டர் பெயரில் உரிமை மூல ஆவணங்கள் உள்ளனவா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ. 2 முதல் வா.சா.ஆ. 7 வரையிலான ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 பட்டாவில் கைலாசப்ப கவுண்டர் பெயரில் எவ்வளவு பரப்பளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 15 ஏக்கர் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 6 பட்டாவின் 15

ஏக்கர் குறிப்பிடப்பட்டதை சாதகமாக்கி பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கைலாசப்ப கவுண்டர் தான் வழக்கு சொத்தின் ஆதி உரிமையாளர் என காட்ட நான் குறியீடு செய்துள்ள ஆவணங்கள் தவிர்த்து என்னிடம் வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

5) என் பாட்டனாரும் , என் தந்தை கந்தசாமியும் இறந்து விட்டனர் என்றால் சரிதான். மேற்படி இருவரும் காலமான பிறகு 17-04-2008 ல் நானும் என் குடும்பத்தினரும் வா.சா.ஆ.1பாக சாசனம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாக சாசனத்தில் பிரதிவாதி தரப்பினராகவோ ,சாட்சியாகவோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாக சாசனத்தில் நாங்கள் கற்பனையாக வழக்கு சொத்தின் மீது உரிமை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.1பாக சாசனம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 பாக சாசனப்படி நானோ , என் குடும்பத்தினரோ ஒருபோதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

6) பிரதிவாதியும் அவரது முன்னோர்களும் தான் வழக்கு சொத்தில் ஆதியில் இருந்து நாளது தேதி வரை அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. என் வழக்குரை பத்தி 4 ல் நான் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து தென்னை மரம் பயிர் செய்து விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் எத்தனை ஆண்டு காலமாக தென்னை மரம் வைத்துள்ளேன் என்றால் நான் தென்னை கன்றுகள் வைத்த போதே பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. வழக்குரை பத்தி 5 ல் பத்தி 4 க்கு மாறாக தென்னை மர கன்றுகள் நடுவதில் இடைஞ்சல் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் வழக்கு சொத்து விவரத்தில் நான்கு எல்லை குறிப்பிடவில்லை என்றால் நான்கு எல்லை குறிப்பிட்டுள்ளேன்.

நான்கு எல்லை குறிப்பிடாமல் குறிப்பிட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) என் பூமியும் பிரதிவாதி பூமியும் அடுத்தடுத்து உள்ளன என்றால் சரியல்ல. அவ்வாறு எனில் பிரதிவாதி பூமி எங்குஉள்ளது என்றால் வழக்கு சொத்திற்கு அடுத்து இல்லை . எனது மற்றோரு பூமிக்கு அடுத்து உள்ளது. வழக்கு காலைக்கு அடுத்து பிரதிவாதி பூமி உள்ளதா என்றால் வழக்கு பூமிக்குஅடுத்து ஒரு ஓடை உள்ளது அதற்கடுத்து என் பூமி உள்ளது அதற்கும் அடுத்து தான் பிரதிவாதி பூமி உள்ளது.

8) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது அவருடன் நில அளவையர் வரவில்லை என்றால் சரிதான். ( **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ. 1 ஆகவும், நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.சா.ஆ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) நீ.சா.ஆ. 1 அறிக்கையின் பத்தி 3 ல் க.ச.எண். 108/1B என்ற காலையும், க.ச.எண். 107/1A என்ற காலையும் நீதிமன்ற ஆணையருக்குளப்படி தெரிய வந்தது என்றால் நான் தான் க.ச.எண்கள் சொன்னேன். நீ.சா.ஆ 1 அறிக்கையில் பத்தி 7 ல் க.ச.எண். 113/1 காலையில் கிணறு இருப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையரிடம் அந்த காலையின் க.ச.எண்ணை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். நான் கூறிய காலை எண்கள் சரியானவையா என நீதிமன்ற ஆணையர் எப்படி உறுதி செய்தார் என்றால் நான் சொன்னதன் அடிப்படையில் தான் குறித்து கொண்டார்.

9) பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி 4 ஆவணங்களை தாக்கல் செய்ய கோரி நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் பிரதிவாதி அந்த ஆவணங்களை 25-08-2021 தேதிலேயே தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான்.

10) 17-01-1958 தேதியிட்ட பரமசிவம் என்பவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சொத்து ஒதுக்கிய பாக சாசனம் , 30-05-1973 தேதியிட்ட பரமசிவம் ஏற்படுத்திய கிரைய ஆவணம், சிவமலை கவுண்டருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம், மயில்சாமி கவுண்டருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் ஆகியவை தான் நான் பிரதிவாதியை தாக்கல் செய்ய கோரிய நான்கு ஆவணங்கள் என்றால் சரிதான். சிவமலை கவுண்டருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணமும், மயில்சாமி கவுண்டருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணமும் 30-05-1973 அன்று ஏற்பட்டவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11) மேற்படி 4 ஆவணங்களை பார்வையிட வேண்டும் என கோரி தான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி நான்கு ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் இல்லை. மேற்படி நான்கு ஆவணங்களில் உள்ள உண்மை பற்றி எனக்கு தெரியுமா என்றால் வழக்கிற்கு பின்பு தான் அந்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும். வழக்கிற்கு பின்பாவது ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி 4 ஆவணங்களில் உள்ள உண்மைகள் எனக்கு தெரிந்தும் தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12 ) வா.சா..ஆ 1 பாக சாசனம் படி தான் நான் வழக்கில் உரிமை கோருகிறேன் என்றால் பட்டா படி கோருகிறேன். என்னிடம் 2008 ஆண்டு முதல் தான் உரிமைமூல ஆவணம் உள்ளது என்றால் சரிதான். ஆதியில் வழக்கு சொத்து உட்பட 600 ஏக்கர் பூமி கெட்டி செட்டியார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அக்குடும்பத்தினர் 17-01-1958 தேதிலேயே பாகம் செய்து கொண்டனர் என்றும் அது தான் நான் கோரிய முதல் ஆவணம் என்றும் சொன்னால் வழக்கிற்கு பின் தான் எனக்கு தெரியும்.

அவ்வாறு பாகம் ஏற்பட்ட போது அக்குடும்ப உறுப்பினரான பரமசிவம் என்கிற செல்வான் என்பவருக்கு 100 ஏக்கர் F செட்யூலில் ஒதுக்கப்பட்டது என்றால் வழக்கிற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரியும். மேற்படி பரமசிவம் என்கிற செல்வான் கெட்டி செட்டியாரின் பேரன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பரமசிவம் என்கிற செல்வான் வழக்கு சொத்து உட்பட 100 ஏக்கர் சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

13) பரமசிவம் என்கிற செல்வான் தனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வழக்கு சொத்துகளையும் , பிற சொத்துகளையும் சேர்த்து 30-05-1973 தேதியில் பிரதிவாதியின் தந்தை சென்னியப்ப கவுண்டருக்கு கிரையம் ஏற்படுத்தினார் என்றால் வழக்கிற்கு பின் தான் தெரியும். அக்கிரைய தேதியில் இருந்து பிரதிவாதியின் தந்தை வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார் என்றும் அவரது இறப்பிற்கு பின்னிட்டு பிரதிவாதி நாளது தேதி வரை அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/- ( மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி